# விஜயபாரதம்

மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY

பிலவ, ஆவணி - 22 செவ்வாய் 07.09.2021 மலர் - 2, இதழ் - 154




விஜயபாரதம்

# வீடுகள் கட்டிக்கொடுத்த சேவாபாரதி

கடந்த ஜனவரி 2020ல் தெலுங்கானா மாநிலம், பைன்சா பகுதியில் முஸ்லிம்கள் கும்பல் ஒன்று, அங்கு வாழும் ஏழை ஹிந்துக்கள் மீது ஒரு திட்டமிட்ட கொடூர தாக்குதலை நடத்தியது. இதில் பலர் பாதிக்கப்பட்டனர். ஹிந்துக்களின் 10 வீடுகள், பல வாகனங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. 12 வீடுகள் சிறிது சேதமடைந்தன.

இதனை அறிந்த அம்மாநில சேவா பாரதி அமைப்பு, துரிதமாக செயல்பட்டு பாதிக்கப்பட்டவர்களை மீட்டது. 22 குடும்பத்தினருக்கு உணவு தானியங்கள், அத்தியாவசிய பொருட்கள் உள்ளிட்ட உதவிகளை உடனடியாக வழங்கியது.

பாதிக்கப்பட்டவர்களுக்கு பத்து புதிய வீடுகளை கட்ட முடிவு செய்தனர் சேவாபாரதி தொண்டர்கள். இதற்காக, தெலுங்கானா மாநில சேவா பாரதி, கேசவ சேவா சமிதி, பல நன்கொடையாளர்கள் ஒத்துழைப்புடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.

இந்த பணிகள் முடிவடைந்ததை அடுத்து, பைன்சா கலவரத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு கோடி ரூபாய் மதிப்பில் புதிதாக கட்டப்பட்ட 10 வீடுகளை சேவா பாரதி வழங்கியது. வெகுஜன கிரஹ பிரவேசம் நடத்தப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய அகில பாரதிய சேவா பிரமுகர் பரக் அபயங்கர், ஹிந்துக்களிடையே ஒற்றுமைக்கான அவசரத் தேவையை வலியுறுத்தினார். ஹிந்து சமூகம் தன்னம்பிக்கை, பரஸ்பர ஒத்துழைப்பு, தாராள மனப்பான்மையை வளர்த்துக்கொள்ள வேண்டும் என கூறினார். மேலும், சேவா பாரதி, ஆர்.எஸ்.எஸ் அமைப்பால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு சமூக சேவை நடவடிக்கைகள், திட்டங்களையும் விளக்கினார்.

இந்த நிகழ்ச்சியில் ஆதிலாபாத் நாடாளுமன்ற உறுப்பினர் சோயம் பாபு ராவ், தெலுங்கானா ஆர்.எஸ்.எஸ் தலைவர் பர்லா தக்ஷிண மூர்த்தி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# இந்து முன்னணி உண்ணாவிரத போராட்டம்

ஹிந்து பக்தர்களின் சார்பாக தமிழகத்தில் விநாயகர் திருமேனிகளை வைத்து வழிபட அனுமதி மறுக்கப்பட்டதை கண்டித்து இந்து முன்னணி மாநிலத் தலைவர் காடேஸ்வரா சுப்பிரமணியம் தலைமையில் சென்னை வள்ளுவர் கோட்டத்தில் செப்டம்பர் 6 ம் தேதி உண்ணாவிரத போராட்டம் நடைபெற்றது.

விஜயபாரதம்




# கோயில்களில் தரிசனத்திற்கு தடை



விஜயபாரதம்

கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கை என கூறி, வெள்ளி, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் கோயில் நடை மூடப்படும், விநாயகர் சதுர்த்திக்கு சிலை வைக்கத் தடை, ஸ்மார்ட் சிட்டி என்ற பெயரில் கோயில்கள் இடிப்பு என்று தி.மு.க தலைமையிலான தமிழக அரசு விதித்து ஹிந்துக்களை மட்டும் தொடர்ந்து வஞ்சிக்கிறது. ஆனால், கிறிஸ்தவ தேவாலயங்கள், முஸ்லிம்களின் மசூதிகளை கண்டும் காணாமலும் விட்டுவிடுகிறது என்ற குற்றச்சாட்டு வைக்கப்பட்டு வருகிறது. இச்சூழலில், கோவை மாவட்டத்தில் அமாவாசை நாளான செப்டம்பர் 6ம் தேதி கோயில்களில் அதிக கூட்டம் கூடுவதைத் தவிர்க்கும் வகையில் பேரூர் பட்டீஸ்வரசுவாமி கோயில், மருதமலை சுப்பிரமணியசுவாமி கோயில், தேக்கம்பட்டி வனபத்ரகாளியம்மன் கோயில், ஆனைமலை மாசாணியம்மன் கோயில் ஆகிய கோயில்களில் பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்ய அனுமதி இல்லை என்று ஆட்சியர் ஜி.எஸ்.சமீரன் தெரிவித்தார். கோயில்களை வைத்து கோடிக்கணக்கில் சம்பாதிக்கும் தமிழக அரசும் ஹிந்து அறநிலையத்துறையும் கோயில்களில் உரிய முன்னெச்சரிகையுடனும் கட்டுப்பாடுகளுடனும் பக்தர்கள் தரிசனத்துக்கு ஏற்பாடுகள் செய்யாமல் இப்படி ஒரேயடியாக தடை போடுவது, வெந்த புண்ணில் வேலை பாய்ச்சுவதை போன்றது என கோவை மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

# எல்லைக்கு செல்லும் விநாயகர்



விஜயபாரதம்

உலகெங்கிலும் உற்சாகத்துடன் கொண்டாடப்படுவது விநாயகர் சதுர்த்தி. தேச சுதந்திரத்திற்காக மக்களை ஒற்றுமைப்படுத்த மிக சிறந்த வழியாக பாலகங்காதர திலகர் தேர்ந்தெடுத்த வெற்றிகரமான வழிகளில் ஒன்று விநாயகர் சதுர்த்தி விழா. தேச பாதுகாப்பிற்கும் விநாயகர் வழிபாட்டிற்கும் பெரிய ஒற்றுமை அன்றிலிருந்தே துவங்கிவிட்டது. இந்நிலையில், நமது பாரத எல்லைப் பகுதிகளை காக்கும் ராணுவ வீரர்களுக்கு உற்சாகம் ஊட்டும் வகையில், அவர்களும் விநாயகர் சதுர்த்தியை சிறப்பாக கொண்டாட, மும்பையில் இருந்து விநாயகர் சிலைகள் சிலவற்றை வீரர்களுக்கு அனுப்பி வருகின்றனர் அப்பகுதி மக்கள்.



விஜயபாரதம்

# அஸ்திவார பணிகள் நிறைவு

உச்ச நீதிமன்ற தீர்ப்பின்படி அயோத்தியில் ஸ்ரீராமர் கோயில் பிரம்மாண்டமாக கட்டப்படுகிறது. 3 மாடிகள், 5 குவிமாடங்கள், கோபுரம், 360 தூண்கள், 360 அடி நீளம், 235 அடி அகலம், 161 அடி உயரத்தில் ராமர் கோயில் கட்டப்பட உள்ளது. இதற்காக கடந்த மார்ச் மாதம் அஸ்திவாரம் அமைக்கும் பணி தொடங்கியது. சுமார் 40 அடி ஆழத்துக்கு அஸ்திவாரம் அமைக்கப்பட்டு வருகிறது. இதனையொட்டி ராம ஜென்ம பூமி தீர்த்த ஷேத்ரா அறக்கட்டளை உறுப்பினர் அனில் மிஸ்ரா கூறுகையில், 'ராமர் கோயில் அஸ்திவார பணிகள் நிறைவு கட்டத்தை எட்டியுள்ளன. அடுத்த ஒரு வாரத்தில் கட்டுமானப் பணிகள் தொடங்கும். கோயில் முழுவதும் கற்களால் கட்டப்பட உள்ளன. ஜெய்ப்பூரை சேர்ந்த சிற்பிகள், கற்களை செதுக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். பிரதான கோயில் கட்டுமானத்துக்கு 4 லட்சம் கியூபிக் அடி கற்கள் பயன்படுத்தப்பட உள்ளன. இதில்60,000 கியூபிக் அடி கற்களை செதுக்கும் பணி ஏற்கனவே நிறைவடைந்துள்ளது' என தெரிவித்தார். குஜராத்தின் சோம்புரா குடும்பத்தை சேர்ந்த வாரிசுகள் ராமர் கோயில் கட்டும் பொறுப்பை ஏற்றுள்ளனர். இக்குடும்பத்தினர் 15 தலைமுறைகளாக கோயில் கட்டுமான பணியில் ஈடுபட்டு வருகின்றனர். சோமநாதர் கோயில் உட்பட இந்தியா முழுவதும் சுமார் 131க்கும் மேற்பட்ட பிரம்மாண்ட கோயில்களை இக்குடும்பத்தினர் கட்டியுள்ளனர். தற்போது சோம்புரா குடும்பத்தை சேர்ந்த சந்திரகாந்த் சோம்புரா தலைமையில் ராமர் கோயில் கட்டப்படுகிறது. அவரின் 2 மகன்கள் நிகில், ஆசிஷ் ஆகியோர் தந்தையின் வழிகாட்டுதலில் ராமர் கோயில் கட்டுமானப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.



விஜயபாரதம்

# முதல் ஜவுளி ரயில்

சரக்கு போக்குவரத்துத் துறையில் மற்ற சரக்கு போக்கு வரத்து முறைகளை விட சிக்கனமானது, வேகமானது, பாதுகாப்பானது ரயில்வே. எனவே, பல நிறுவனங்களும் ரயிலில் சரக்குகளை அனுப்பவே அதிகம் விரும்புகின்றன. இதற்காக, நமது மத்திய அரசு எடுத்துள்ள விஷேஷ சரக்கு ரயில்கள், தனி சரக்கு போக்குவரத்து இருப்புபாதை உள்ளிட்ட பல்வேறு முயர்சிகளால் தற்போது ரயில் சரக்கு போக்குவரத்து முன்னெப்போதும் இல்லாத வகையில் வேகமாக வளர்ந்து வருகிறது. கொரோனா பொதுமுடக்க காலத்தில் நம் அனைவருக்கும் அத்தியாவசிய பொருட்கள் அனைத்தும் தங்கு தடையின்றி கிடைத்ததற்கு சரக்கு ரயில்களை ரயில்வே துறை, மிக சிறப்பாக இயக்கியதும் ஒரு முக்கிய காரணம். இந்நிலையில், மேற்கு ரயில்வே, முதல் ஜவுளி பார்சல் ரயிலை கடந்த சனிக்கிழமை இயக்கியது. 25 சரக்குப் பெட்டிகள் கொண்ட இந்த முதல் டெக்ஸ்டைல் பார்சல் ரயில், குஜராத்தின் சூரத்திலிருந்து பீகார் வரை இயக்கப்பட்டது. இதனை உத்னா புதிய சரக்கு முனையத்தில் இருந்து ரயில்வே இணை அமைச்சர் தர்ஷனா ஜர்தோஷால் கொடி அசைத்து துவக்கி வைத்தார்.

# மதுரை ஆதீனம் கருத்து


விஜயபாரதம்

ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில், வ.உ.சி., உருவச் சிலைக்கு மாலை அணிவித்த பின் மதுரை ஆதீனம் ஹரிஹர ஞானசம்பந்த தேசிகர் சுவாமிகள் பேசுகையில், 'விநாயகர் சதுர்த்தி இன்று நேற்றல்ல, வெள்ளையர்களை எதிர்த்து கொண்டாடப்பட்ட விழா. அதற்கு தடை விதித்திருப்பது சரியல்ல. 'விநாயகர் சதுர்த்தி விழாவை அரசே ஏற்று நடத்த வேண்டும். அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராகலாம் என்கிறது அரசு. இதே சூழலை மற்ற மதங்களிலும் செயல்படுத்துவார்களா? ஒவ்வொரு மதத்திலும், பல்வேறு பிரிவுகள் உள்ளன. அவர்களுக்குள்ளும் பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. ஒரு மதத்தில் மட்டும் அனைத்து விஷயத்தையும் புகுத்துவது தவறு. மத்தியில் மோடி அரசு, பாரதத்தை பாதுகாத்து வருகிறது. மோடியின் செயல்பாட்டால் லடாக் பகுதி பாதுகாக்கப்பட்டுள்ளது; இல்லையென்றால் பராக் ஆகியிருக்கும். படிக்கும் மாணவர்கள் பாஸ் மார்க் வாங்குகின்றனரோ, இல்லையோ, 'டாஸ்மாக்' சென்று சரக்கு வாங்குகின்றனர். இளைஞர்களை பாதுகாக்க மதுக்கடைகளை மூட வேண்டும். இன்றைய இளைஞர்கள் அரசியல், சினிமாவால் குழம்பியுள்ளனர்' என்று கூறினார்.

# மிளிரும் பாரதத்தின் யுனிகார்ன்



விஜயபாரதம்

7,300 கோடி ரூபாய்க்கு மேல் மதிப்பு கொண்ட தனியார் ஸ்டார்ட் அப் நிறுவனங்கள், 'யுனிகார்ன்' நிறுவனங்கள் என அழைக்கப்படும். பாரதத்தில் நடப்பு ஆண்டில், 'மாதத்துக்கு மூன்று' என்ற அளவில், யுனிகார்ன் நிறுவனங்கள் உருவாகி வருகின்றன. கடந்த ஆகஸ்ட் மாத இறுதி நிலவரப்படி, பாரதத்தில் மொத்தம் 51 யுனிகார்ன் நிறுவனங்கள் உள்ளன. இதில், நடப்பு ஆண்டில் மட்டுமே 26 நிறுவனங்கள் உருவாகி உள்ளன. அதாவது, சராசரியாக மாதத்துக்கு மூன்று நிறுவனங்கள் என உருவாகி உள்ளன. இதனை நமது மத்திய அரசு ஆரம்பித்தபோது, 'பகோடா ஸ்கீம்' என எதிர்கட்சிகள் கொண்டல் அடித்தன. ஆனால், தற்போது உலகளவில் அதிக யுனிகார்ன் கொண்ட நாடுகள் வரிசையில், அமெரிக்கா, சீனாவுக்கு அடுத்தபடியாக மூன்றாவதாக நமது பாரதம் உள்ளது.

# கனல் கண்ணன் கருத்து



விஜயபாரதம்

திரைத்துறை சண்டைப் பயிற்சி இயக்குனர் கனல் கண்ணன், 'விநாயகர் சதுர்த்தி விழா கொண்டாட அனுமதி மறுப்பது மிகுந்த வேதனை அளிக்கிறது. இது கண்டிக்கப்பட வேண்டியது. அரசு இதனை மறுபரிசீலனை செய்ய வேண்டும். சத்ரபதி வீரசிவாஜி, பாலகங்காதர திலகர் எல்லாம் விநாயகர் சதுர்த்தி விழாவை விமர்சையாக நடத்தியுள்ளனர். ஹிந்துக்களுக்கு மட்டும் ஏன் இந்த தடை? ஜல்லிகட்டுக்கு கொடி பிடித்தவர்கள் விநாயகர் சதுர்த்தி தடையை எதிர்த்து கேள்வி கேட்கவில்லை என்பது வேடிக்கையாகவும் வேதனையாகவும் உள்ளது. ஹிந்துக்கள் தேசத்தில் ஹிந்து பண்டிகை கொண்டாட இத்தனை இடர்களா? என்று எண்ணும்போது வேதனை அளிக்கிறது. இது நம் உரிமை, நமது பெருமை. இன்றைய சூழலில், இறையருள் ஒன்றுதான் நம்மையும் நம் நாட்டையும் காக்கும். ஒன்று படுவோம், உறுதிமொழி எடுப்போம்' என தெரிவித்துள்ளார்.

# முன்னாள் ஆளுநர் மீது வழக்குப் பதிவு



விஜயபாரதம்

உத்தரபிரதேச முன்னாள் ஆளுனர் அஜீஸ் குரேஷி, ராம்பூர் சட்டமன்ற உறுப்பினரும் சமாஜ்வாடி கட்சியின் சர்ச்சைக்குரிய தலைவர் அஸம் கானின் மனைவியுமான தன்சீம் பாத்திமாவை சந்தித்து பேசினார். அப்போது அங்கு அவர், உ.பி முதல்வர் யோகி ஆதித்யநாத் தலைமையிலான அரசை மிகவும் தரக்குறைவாகவும் இரு சமுகங்களுக்கு இடையே பதற்றத்தை உருவாக்கும் வகையிலும் பேசியுள்ளார். இதனையடுத்து ராம்பூர் மாவட்ட காவல் நிலையத்தில் பா.ஜ.க உறுப்பினர் ஆகாஷ் சக்சேனா புகார் அளித்தார். அந்த புகாரின் பேரில், உத்தரபிரதேச முன்னாள் ஆளுனர் அஜீஸ் குரேஷி மீது அவதூறாக பேசுதல், தேசத்துரோகம் உள்ளிட்ட வழக்குகளை அம்மாநில காவல்துறையினர் பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# குரல் வலையை நெறிக்கும் ஆந்திர அரசு



விஜயபாரதம்

விநாயகர் சதுர்த்தி விரைவில் கொண்டாடப்பட உள்ள நிலையில், ஜெகன் மோகன் ரெட்டி தலைமையிலான ஆந்திர அரசு, கொரோனாவை காரணம் காட்டி அதீத கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. மேலும், முன்னெச்சரிகை நடவடிக்கை என கூறி ஆந்திர மாநில பா.ஜ.க தலைவர் சோமு வீரராஜு, மாநில பொதுச் செயலாளர் விஷ்ணுவர்தன் ரெட்டி, சத்ய குமார் ஆகிய முக்கியத் தலைவர்களை கைது செய்துள்ளது. இதற்கு பா.ஜ.க, ஹிந்து அமைப்புகள், பொதுமக்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன. தேசிய குரல்களையும் ஹிந்து குரல்களையும் ஒடுக்குவதில் மும்முரமாக இருக்கிறார் முதல்வர் ஜெகன் மோகன் என்று பா.ஜ.க தேசிய செயலாளர், சுனில் தியோதர் கூறியுள்ளார். கிறிஸ்தவரான ஜெகன் மோகன் ரெட்டி ஆந்திர முதல்வரானதில் இருந்து அங்கு ஹிந்துக்கள் மீதான அடக்குமுறைகள் அவரது தந்தையின் காலத்தைவிட மிகவும் அதிகமாகி உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# மகா பஞ்சாயத்தின் உள்நோக்கம்

மத்திய அரசின் புதிய வேளாண் சட்டங்களை எதிர்த்து சம்யுக்த கிசான் மோர்ச்சா அமைப்பு, உத்தர பிரதேசத்தில், செப்டம்பர் 5ல் ‘மகா பஞ்சாயத்து’ நடத்தவும், செப்டம்பர் 27ல் 'பாரத் பந்த்' நடத்தவும் அழைப்பு விடுத்தது. அதன்படி நடைபெற்ற மகா பஞ்சாயத்து நிகழ்ச்சியில் நடைபெற்ற அனைத்தும் அவர்கள் முன்பு போராட்ட கொள்கைகளுக்கு நேர் மாறாகவே இருந்தது. உதாரணமாக, வரும் தேர்தலில், உத்தரபிரதேசம், உத்தரகாண்டில் கட்சித் துவங்கி, பா.ஜ.கவை தோற்கடிப்போம் என மகா பஞ்சாயத்தில் தெரிவித்தனர். பா.ஜ.கவை தூற்றுவது மட்டுமே இக்கூட்டத்தின் முக்கிய நோக்கமாக இருந்தது. ஆனால், போராட்ட துவக்கத்தின்போது, ‘இது விவசாயிகளின் போராட்டம், அரசியல் கலப்பற்றது, இது அரசியலில் ஈடுபடாது’ என அவர்கள் கூறியிருந்தனர். அதேபோல, ‘போராட்டத்தில் ஹர ஹர மஹாதேவ், அல்லாஹு அக்பர் என இரண்டு கோஷங்களும் எழுப்பப்படும்’ என கூறிய அதன் தலைவர் ராகேஷ் திகாயத், மேடையில் அல்லாஹு அக்பர் என்ற கோஷத்தை மட்டுமே எழுப்பினார். அவர்களின் இந்த செயல்கள், இப்போராட்டத்தின் இப்போராட்டத்திற்காக செலவு செய்பவர்கள் யார், அவர்களின் பின்னணி, உள்நோக்கம், இதனால் அவர்களுக்கு கிடைக்கப்போகும் ஆதாயம் என்ன என்பது குறித்து எடுத்துரைப்பதாகவே உள்ளது என அரசியல் நோக்கர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

விஜயபாரதம்





# வளரும் ஹிமாச்சல பிரதேசம்

விஜயபாரதம்

பயங்கரவாத நடவடிக்கைகள், 370 சட்டப்பிரிவு போன்ற காரணங்களால் பல ஆண்டுகளாக வளர்ச்சி பெறமல் இருந்த ஜம்மு காஷ்மீர் பிரதேசம் தற்போது வேகமாக வளரும் மாநிலங்களில் ஒன்றாக உருவெடுத்துள்ளது. ஓரிரு தினங்களுக்கு முன் பல்வேறு தொழில்துறை நிறுவனங்களுடன் ரூ. 3,307 கோடி மதிப்புள்ள 27 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திடப்பட்டு உள்ளன. இதன் மூலம் சுமார் 15,000 பேருக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலைவாய்ப்புகள் கிடைக்கும். முதலீட்டாளர்களுக்கு மலிவான நிலச் செலவு, நம்பகமான மின்சாரம், அனைவரும் அணுகக்கூடிய வகையிலான எளிய நிர்வாகம் போன்ற வசதிகளை அம்மாநில அரசு வழங்கி வருகிறது. இதில், 6 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் 1,000 கோடி ரூபாய் மாநிலத்தில் எத்தனால் ஆலைகளை அமைப்பதற்காக மட்டுமே கையெழுத்திடப்பட்டு உள்ளது. இதைத்தவிர, மருத்துவ சாதனங்கள், கல்வி, மருந்துகள், காகித உற்பத்தி, உணவு பதப்படுத்துதல், சுகாதாரம், ஆட்டோமொபைல், எலக்ட்ரானிக்ஸ், தொழில்துறை உட்கட்டமைப்பு போன்ற பல்வேறு துறைகளில் முதலீடுகள் செய்யப்பட்டுள்ளன. ஒரு சில தொழில் முனைவோர் தீம் பூங்காக்களை நிறுவுவதிலும் விருப்பம் காட்டியுள்ளனர்.

# முன்னாள் அமைச்சருக்கு லுக்அவுட் நோட்டீஸ்



விஜயபாரதம்

காங்கிரசை சேர்ந்த முன்னாள் மகாராஷ்டிரா மாநில அமைச்சர் அனில் தேஷ்முக், பல கோடி ரூபாய் முறைகேடு, குற்றத்தை மறக்க அரசு அதிகாரிகளுக்கு பணம், ஆப்பிள் ஐ போன் உள்ளிட்டவற்றை லஞ்சமாக வழங்கியது போன்ற முறைகேடு புகார்கள் உள்ளன. இவ்வழக்கு விசாரணைக்காக அவர் ஆஜராக ஐந்து முறை சம்மன் அனுப்பப்பட்டும் அவர் அமலாக்கத்துறையின் முன் ஆஜராகவில்லை. இவ்வழக்கு விசாரணையில் இருந்து தப்பிக்க அவர் நாட்டை விட்டே தப்பிக்கலாம் என கருதப்பட்ட நிலையில், அவர் வெளியேறுவதை தடுக்க அமலாக்கத்துறை அவர் மீது லுக்அவுட் நோட்டீஸ் பிறப்பித்துள்ளது. இந்த லுக்அவுட் நோட்டீஸ் ஒரு வருடத்திற்கு அல்லது அமலாக்கத்துறை அதனைத் திரும்பப் பெறும் வரை செல்லுபடியாகும்.


# தேர்தல் ஆணையத்துக்கு கேள்வி




விஜயபாரதம்

மேற்கு வங்கத்தில் சமீபத்தில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் நந்திகிராம் சட்டமன்றத் தொகுதியில் மமதா பானர்ஜியை பா.ஜ.க சார்பில் போட்டியிட்ட சுவேந்து அதிகாரி தோற்கடித்தார். எனினும் தேர்தலில் வெற்றி பெற்ற திருணமூல் கட்சி சார்பாக மமதா முதல்வரானார். இதனை அடுத்து 6 மாதங்களுக்குள் தேர்தலில் வெற்றி பெற்று முதல்வராக வேண்டிய கட்டாயத்தில் மமதா உள்ளார். அங்கு கொரோனா பரவல் காரணமாக தேர்தல் நடத்த முடியாது என தெரிவித்த தேர்தல் ஆணையம், திடீரென அங்கு செப்டம்பர் 30ல் இடைத்தேர்தலை அறிவித்தது. இது குறித்து கேள்வி எழுப்பியுள்ள மேற்கு வங்க பா.ஜ.க தலைவர் திலீப் கோஷ், 'புதிய அரசை அமைக்க தேர்தலை நடத்தும் பொறுப்பு தேர்தல் ஆணையத்திடம் உள்ளது. நியாயமான தேர்தலை நடத்துவது அவர்களின் பொறுப்பு. ஆனால் ஒரு குறிப்பிட்ட நபரை முதல்வராக்குவது என்பது தேர்தல் ஆணையத்தின் பொறுப்பு அல்ல. தமிழகம், பீகார், உத்தரகாண்ட் உள்ளிட்ட இடங்களில் இடைத்தேர்தல்கள் நடத்தப்படவில்லை, இரண்டரை ஆண்டுகளாக, நகராட்சி அமைப்புகளுக்கான தேர்தல்கள் கொரோனா காரணமாக நடத்தப்படவில்லை. ஆனால் இங்கு இப்போது மட்டும் இடைத்தேர்தலுக்கு ஏன் இவ்வளவு அவசரம்? அங்குள்ள மக்களுக்கு தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க உரிமை இல்லையா? மமதா பானர்ஜியை வெற்றி பெறச் செய்யும் பொறுப்பை தேர்தல் ஆணையம் கையில் எடுத்துக்கொண்டுள்ளதோ என எண்ணத் தோன்றுகிறது' என கேள்வி எழுப்பியுள்ளார்.

# மமதாவுக்கு உதவுகிறதா காங்கிரஸ் ?



விஜயபாரதம்

மேற்கு வங்கத்தில் இம்மாத இறுதியில் நடைபெற உள்ள இடைத்தேர்தலில் மமதா போட்டியிடுகிறார். அவரை ஜெயிக்க வைக்க ஏதுவாக காங்கிரஸ் கட்சி, தனது வேட்பாளரை நிறுத்துவதில்லை என முடிவெடுக்க உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. முன்னதாக, மேற்கு வங்க சட்டமன்ற தேர்தலில், மமதா பானர்ஜியின் திருணமூல் காங்கிரஸ் கட்சியை ஜெயிக்க வைப்பதற்காக, காங்கிரஸ் கட்சி வேண்டும் என்றே சரியாக பிரச்சாரம் செய்யவில்லை, ராகுல் உட்பட அனைத்துத் தலைவர்களும் பிரச்சாரம் செய்யாமல் ஒதுங்கிவிட்டனர், எங்களை கைகழுவிவிட்டனர், இதனால் ஒரு தொகுதியில்கூட காங்கிரஸ் ஜெயிக்கவில்லை, தொண்டர்கள் விரக்தி அடைந்துவிட்டனர், தற்போது மேற்கு வங்கத்தில் காங்கிரஸ் காணாமல் போய்கொண்டிருக்கிறது என மேற்கு வங்க காங்கிரஸ் தலைவர்களும், அவர்களது கூட்டணியினரும் புலம்பினர் என்பது நினைவு கூரத்தக்கது.

# கங்கைக்கரையில் இயற்கை வேளாண்மை

உத்தர பிரதேச அரசு, கங்கைக்கரையினை ஒட்டிய 11 மாவட்டங்களைச் சேர்ந்த 21,142 விவசாயிகளுக்கு உதவிகளை வழங்கி சுமார் 14,000 ஹெக்டேர் பரப்பளவில் 700 இயற்கை விவசாய மண்டலங்களை உருவாக்கியுள்ளது. இதனால், விவசாயிகளின் விவசாயச் செலவு குறைந்துள்ளது. உற்பத்தியும் வருமானமும் அதிகரித்துள்ளது. கங்கை நதி மாசடைவதும் குறைந்துள்ளது. இந்த விவசாயிகள் கரிஃப் 2020 மற்றும் ரபி 202021 பருவ காலங்களில் இயற்கை விவசாயத்தின் மூலமாக பல்வேறு பயிர்களை பயிரிட்டுள்ளனர். அந்த பொருட்கள் பேக் செய்யப்பட்டு நல்ல விலையில் விற்கப்பட்டன. இத்தயாரிப்புகள் கண்காட்சிகள், கருத்தரங்குகளில் காட்சிப்படுத்தப்பட்டன. இத்திட்டத்தில் இதுவரை ரூ. 2.76 கோடி மதிப்புள்ள இயற்கை வேளாண் பொருட்கள் விற்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் இரண்டாம் கட்டம் விரைவில் தொடங்கப்படும். இயற்கை வேளாண்மையை ஊக்குவிக்க கரிம சான்றிதழ் அமைப்பு அமைத்தல், வெர்மி உரம் தயாரிப்பு, சாண எரிவாயு உற்பத்தி, தாவரங்கள் உணவு பதப்படுத்துதலுக்கு சிறப்பு மானியங்கள், ஆறு மாவட்டங்களில் உணவு பதப்படுத்தும் பூங்காக்கள், பேக்கேஜிங், ஏற்றுமதி ஆராய்ச்சி வசதிகள், உணவு பதப்படுத்துதல் துறையில் ஈடுபடும் சிறுதொழில் அமைப்பதற்கு வட்டியில்லா கடன்கள் வழங்குதல் போன்றவை செயல்படுத்தப்படும்' என தெரிவிக்கப்பட்டுள்ளது.



விஜயபாரதம்

# நோக்கு கூலி



விஜயபாரதம்

கேரளாவில் வாகனங்களில் இருந்து சுமைகளை இறக்க ஏற்ற சுமை தொழிலாளர்களை பயன்படுத்தாமல் சொந்தமாகவோ இயந்திரத்துடனோ அவற்றை கையாண்டால்கூட அதனை வெறுமனே பார்த்துக்கொண்டிருந்ததற்காக சுமை தொழிலாளர் சங்கத்திற்கு 'நோக்கு கூலி' என்ற ஒன்று கட்டாயம் வழங்கப்பட வேண்டும் என்ற நடைமுறை பல காலமாக உண்டு. இது போன்ற பல்வேறு கம்யூனிச சிந்தனைகள்கூட அம்மாநிலம் தொழில்துறையில் வளராமல் போனதற்கு ஒரு காரணம். அங்குள்ள மத்திய மாநில அரசுத்துறை நிறுவனங்கள்கூட இப்படி நோக்கு கூலி கொடுத்துவந்தது என்பது வேதனை. நீதிமன்றம் இம்முறையை ஒழிக்க வேண்டும் என கூறியும்கூட இது இன்றும் தொடர்கிறது. சமீபத்தில் விக்ரம் சாராபாய் விண்வெளி நிலையத்தில் இயந்திரம் உதவியால் சில பொருட்கள் இறக்கிய பிறகு நோக்கு கூலி கேட்டு லாரியை மடக்கினர் அங்குள்ள தொழிலாளர்கள். இது குறித்து புகார் அளிக்கப்பட்டது. தொழிலாளர்துறை அதிகாரிகள், காவல் அதிகாரிகள் வந்து சமாதானம் பேசி அவர்களை அனுப்பி வைத்தனர்.

# கொரோனா உருவாகிய கதை



விஜயபாரதம்

விருது பெற்ற ஆஸ்திரேலிய பத்திரிகையாளர் ஷாரி மார்க்சன் என்பவர் எழுதிய 'வுஹானில் உண்மையில் நடந்தது என்ன' என்ற புத்தகம் இம்மாத இறுதியில் வெளியாகிறது. இதில் சீனாவில் கொரோனா தோன்றியதன் காரணம், அந்த கொடிய கிருமி குறித்த ஆராய்ச்சியில் அமெரிக்காவின் பங்கு, அமெரிக்க உயர்மட்ட தொற்று நோய் ஆலோசகர் டாக்டர் அந்தோனி ஃபாசியின் மூலமாக அதற்கு நிதியளிக்கப்பட்ட விவகாரம், அமெரிக்காவின் கண்காணிப்பை மீறி சீனா தன்னிச்சையாக செயல்பட்டது, தொற்றக்கூடிய நோய் கிருமிகளை கண்டறிந்து அதனை வகைப்படுத்த, சேமிக்க சீனா எடுக்கும் முயற்சிகள், தொற்று நோய்களை கண்டறிய உலக ஆராய்ச்சியாளர்கள் ஒன்றிணைந்து ஆய்வுகள் செய்ய வேண்டும் என்ற ஒப்பந்தத்தை சீனா மீறியது, கொரோனா வெளிப்பாட்டின் காரணமாக அமெரிக்கா ஒரே ஆண்டில் 22 வைரஸ் ஆராய்ச்சி துறைகளுக்கு கொடுத்து வந்த நிதியுதவியை நிறுத்தியது' உள்ளிட்ட பல்வேறு தகவல்கள் அதாரங்களுடன் இடம்பெற உள்ளது என்ற தகவல் வெளியாகியுள்ளது என 'டெய்லி மெயில்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

# வலையில் சிக்கிய மீம்கள்



# யானையின் எடை

அரசர் ஒருவருக்குத் திடீரென்று ஒரு நாள், தன் பட்டத்து யானை எவ்வளவு எடை இருக்கும் என்று அறிய ஆவல் ஏற்பட்டது. அந்தக் காலத்தில் எடைமேடைகள் எல்லாம் இல்லை; யானையை அளக்கும் அளவுக்குப் பெரிய தராசும் கிடையாது.


யானையின் எடையை எப்படி அறிவது.? என்று அமைச்சர்களிடம் கேட்டார் மன்னர். யாருக்கும் அதற்கான வழி தெரியவில்லை. அப்போது அமைச்சர் ஒருவரின் பத்து வயது மகன், 'நான் இதன் எடையைச் சரியாகக் கணித்துச் சொல்கிறேன்' என்றான். அதைக் கேட்டு அனைவரும் சிரித்தனர். ஆனால், அவனுக்கும் ஒரு வாய்ப்பு கொடுத்தார் மன்னர்.

அந்தச் சிறுவன், யானையை நதிக்கு அழைத்துச் சென்றான். அங்கே இருந்த மிகப் பெரிய படகில் யானையை ஏற்றினான். யானை ஏறியதும், தண்ணீரில் ஆழ்ந்தது படகு. உடனே அவன், தண்ணீர் நனைத்த மட்டத்தைப் படகில் குறியீடு செய்தான். பிறகு, யானையைப் படகிலிருந்து இறக்கி, பெரிய பெரிய கற்களைப் படகில் ஏற்றச் சொன்னான். முன்பு குறித்து வைத்திருந்த குறியீடு அளவுக்குப் படகு தண்ணீரில் மூழ்கும் வரை, கற்கள் ஏற்றப்பட்டன. பின்பு, அரசரிடம் அந்தக் கற்களைக் காட்டி, ''அவற்றின் எடைதான் அந்த யானையின் எடை'' என்றான். அனைவரும் வியந்தனர். அவனது புத்திசாலித்தனத்தைப் போற்றிப் புகழ்ந்தனர்.

எல்லோரும் யானையை ஒட்டுமொத்த உருவமாகத்தான் பார்த்தார்கள். ஆகவே, அவர்களால் அதன் எடையைக் கணிக்கமுடியும் எனும் நம்பிக்கை வரவில்லை. ஆனால் அந்தச் சிறுவனோ, பல எடைகளின் கூட்டுத்தொகையே யானையின் எடை என்று எண்ணிச் செயல்பட்டான்; எளிதில் விடை கண்டான்.

எவ்வளவு பெரிய செயலாக இருந்தாலும், அதைச் சின்னச் சின்ன செயல்களாகப் பிரித்துக்கொள்ளவேண்டும். பிறகு, அந்த ஒவ்வொரு செயலையும், செவ்வனே செய்து முடிக்கவேண்டும். அப்போது, ஒட்டுமொத்தத் திட்டமும் அழகாக நிறைவேறிவிடும்.

விஜயபாரதம்



# விநாயகர் சதுர்த்திக்கு தடை
# வீடுகளிலிருந்து கிளம்பியது எதிர்ப்பு அலை




















சதுர்த்திக்கு










விநாயகர்
தடையா



